# வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 -- 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 23,266 மில்லியனாக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 29,325 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 147,064 | 2,610 | 146,674 |
| நடைபெறும் வேலைகள் | 16,100,660,630 | 432,126,680 | 16,532,787,310 |
| முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும் | 7,165,552,215 | 5,626,884,014 | 12,792,436,229 |
| | 23,266,359,909 | 6,059,013,304 | 29,325,373,213 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேலதிக நிதியேற்பாட்டின் விளைவாக மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட அட்டுறு செலவினத்தில் ரூபா 77,731,936 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வேலைத்தளத்திலுள்ள பொருட்களின் பெறுமதியில் 80 சதவீதம் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் (ஐபிசீ) ஊடாக ஒப்பந்தகாரரால் கோர முடியுமென்ற போதிலும், பொருட்களின் அளவீட்டுத் தாட்கள் மெய்மையாய்வு செய்யாமல் வேலைத்தளத்திலுள்ள பொருட்களிற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,387,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

2007 ஏப்ரல் 5 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகளிலுள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆளணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கு முரணாக, எட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் செயற்திட்ட ஆலோசனைப் பிரிவிற்கு சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், 4 ஆலோசனை ஆளணி செயற்திட்டத்தால் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் வேதனங்கள் மற்றும் போக்குவரத்துப் படியாக ரூபா

1,128,090 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது, ஆனால் அந்த ஆலோசனையாளர்களின் செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேலைத்தளத்தில் ஒப்பந்தகாரர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த நிபந்தனையின் 8.3 ஆம் இலக்க உப பிரிவின் பிரகாரம் அந்தவிடத்திலிருந்து வேலைகளின் நாளதுவரையாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் இன்மையால், இடம்பெற்றுள்ளதுடன் வேலையின் நோக்கெல்லைகளில் பல மாற்றங்கள் பலவற்றைக் கொண்டுள்ளதுடன் வேலைகள் நாளுக்கு நாள் எழுந்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அத்தகைய நிலைமை சீ 6 ஆம் இலக்க ஒப்பந்த நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்டதன் விளைவாக ஒப்பந்தத்தில் மேலதிக கிரயம், கால நீடிப்பு போன்றன ஏற்படலாம்.

(ஆ) அரசாங்க பிரதாம விலை மதிப்பீட்டாளரிடமிருந்கு வாடகை மதிப்பீடு பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டிற்காக சீ 6 ஆம் இலக்க ஒப்பந்த பொதி தொடர்பான பொறியியல் அலுவலகம் செயற்பட்டுவந்திருந்த கட்டிடத்திற்காக மாதாந்த வாடகையாக ரூபா 100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) குறித்த ஒப்பந்த நிபந்தனையின் பரிமாணம் 2 இன் 4.8 ஆம் உப பிரிவின்படி, ஒப்பந்தகாரர் வேலை நிறைவேற்றலின் போது தொடர்ச்சியாக இருக்க வேண்டிய பாதுகாப்பான முன்னெச்சரிக்கைகள் மற்றும் திருப்திகரமான போக்வுரத்துக் கட்டுப்பாட்டு ஒழுங்குகள் என்பவற்றுடன் இணங்கியிருக்க வேண்டும். வதிவிடப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட 2013 யூன் 18 ஆந்திகதிய பிஆர்பி2/சீ6சீடபிள்யூ/01/035 ஆம் இலக்க கடிதத்தின்படி, வழங்கப்பட்ட பாதுகாப்பான முன்னெச்சரிக்கைகள் மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஒழுங்குகள் சங்கிலி 10+890 முதல் 10+988 வரையான வீதிப் பிரிவில் திருப்தியற்றிருந்ததுடன் சீ 6 ஆம் இலக்க ஒப்பந்தத்தில் 13 ஆம் கிலோ மீற்றரில் நிலுவையாகவிருந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன என்று அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் கஷ்டங்களிற்கு முகங்கொடுத்தனர். வீதி அபிவிருத்தி அதிகாரசபை வழிகாட்டல்கள் மற்றும் போக்குவரத்து முகாமைத்துவத் திட்டம்

என்பவற்றின்படி மேற்குறிப்பிட்ட இணங்காமைகளிற்காக செயற்திட்டத்தின் வதிவிடப் பொறியியலாளரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அநுராதபுரம் - கல்குளம் வீதிச் செயற்திட்டத்தின் உடன்பட்ட 1.18 மிமீ, 2.36 மிமீ மற்றும் 4.75 மிமீ கூட்டுமொத்த அளவு தரப்படுத்தல் (செயற்திட்ட இல ஆர்டிஏ/ஆர்என்ஐபி/பிஆர்பி2/சீ6) தொடர்பில் வதிவிடப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட 12 மற்றும் 13 ஆம் இலக்க உறுதிப்படுத்தாத அறிக்கையின்படி, குறிப்பிடப்ட்ட எல்லைகளிற்கு வெளியே உள்ளன. மேலும், சரியாக்கல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் ஆர்ஈ இற்கு ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட ஆலோசனைப் பிரிவால் வழங்ககப்பட்ட அறிவுறுத்தலின்படி ஒப்பந்தகாரர் சமர்ப்பித்திருந்தாரா என்பதற்கான எழுத்துமூல சான்றுகளும் கிடைத்திருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(உ) சில முரண்களின் அறிமுகப்படுத்தல் காரணமாக கல்குளம் – அநுராதபுரம் வீதிச் செயற்திட்டத்தில் (செயற்திட்ட இல ஆர்டிஏ/ஆர்என்ஐபி/பிஆர்பி2/6சீ) செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் வேலைகளின் நோக்கெல்லை மாற்றப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. திருத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தின்படி, சகல வேலைகளும் 2013 செப்தெம்பர் 12 அளவில் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பீஓகியூ அளவீட்டின் 35 சதவீதத்திலும் பார்க்க அதிகமாக ஏபீசி ஆளவு விஞ்சியுள்ளது.

(ii) உப தள பொருள் அளவும் 500 சதவீதத்தைவிடவும் விஞ்சியிருந்தது.

(iii) வடிகாலமைப்பு, நடைபாதை வேலை, தளவரிசை போன்ற போன்றவற்றின் (அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு எதிரேயுள்ள வீதி) முரணாக சங்கில் 15+000 முதல் 16+000 வரையான புதிய வேலைகள் ஆரம்ப பூர்த்தியாக்கல் காலத்திற்குள் பூர்த்தியாக்கப்பட்டோ அல்லது ஒப்பந்த காலம் நீடிக்கப்படடோ இருக்கவில்லை.

(ஊ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 1.21 (ஊ) ஆம் பிரிவின்படி ஒப்பந்தகாரர்களின் மதிப்பாய்வு மற்றும் தெரிவில் தெளிவான மற்றும்

மாற்றமின்மை கொள்வனவு நடைமுறைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2006 - அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் சீன அபிவிருத்தி வங்கியின் பிரதம இலங்கை வதிவிடப் பிரதிநிதியால், வழங்கப்பட்ட கடிதத்தின் 3 ஆம் பந்தியிலுள்ள அறிவுறுத்தலின்படி செயற்திட்டத்தால் 3 சீன ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 34,379 மில்லியன் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது.

## 3.4 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 4.4 ஆம் பிரிவின்படி, ஒப்பந்தகாரர் மொத்த வேலைகளையும் உப ஒப்பந்தத்தின் வழங்கப்பட்டிருக்காத போதிலும் ரூபா ஒபபந்தகாரர்கள் மேற்குறிப்பிட்ட ஒப்பந்த நிபந்தனையை மீறி சீ5பீ, சீ10ஏ மற்றும் சீ10பீ ஆம் இலக்க ஒப்பந்தங்கள் தொடர்பில் உப ஒப்பந்தகாரர்களிற்கு 7,275 மில்லியன் பெறுமதியான மொத்த ஒப்பந்த வேலைகளையும் வழங்கியிருந்தனர். மேலும், ஒப்பந்த நிபந்தனைகளின்படி, மேற்பார்வை ஆலோசனைக்கு உப ஒப்பந்தகாரர்களின் வேலையை நேரடியாக கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லாதிருந்ததுடன் இந்த நிலைமை வேலையின் தரம் மற்றும் செயலாற்றலை பாதிக்கலாம் என்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) வேலைத்தள கூட்டக் குறிப்புகளின் படி, ஒப்பந்தகாரருடைய நடைபெறும் வேலைகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு கீழே இருந்ததென செயற்திட்டத்தின் மாதாந்த அறிக்கை குறிக்கப்பட்டிருந்தது. திறனுடைய மற்றும் திறனற்ற தொழிலாளர்கள், பொறி மற்றும் உபகரணங்கள் போன்ற அத்தகைய ஒப்பந்தக்காரருடைய வளங்கள் அவர்களுடைய மாதாந்த பட்டியலிடப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு போதியதாக இருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தக்காரருடைய வளங்கள் போதாமையின் விளைவாக, நிர்மாண வேலையின் பிரதான விடயங்கள் இலக்கிடப்பட்ட முன்னேற்றத்தைவிட குறிப்பிடத்தக்களவு பின்தங்கியிருந்தன. எதிர்பார்க்கபட்ட மற்றும் பௌதீக முன்னேற்றங்களை ஒப்பிடும் போது பின்வரும் மெதுவான முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டது.

| | ஒப்பந்த இல | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் | உள்ளபடியான முன்னேற்றம் | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | | % | % | % |
| i | சீ21 – திருவாணக்கெட்டிய-அகலவத்தை வீதியில் பாலங்களின் புனர்நிர்மாணம் | 51.52 | 33 | 18.52 |
| ii | சீ4சீ – ஹொரவெல-பெலவத்தை – பிட்டிகல வீதி | 100 | 27.80 | 72.20 |
| iii | சீ24 — கொரணை அங்குருவத்தோட்ட – அழுத்கம வீதியில் பாலங்களின் புனர்நிர்மாணம் | 67.77 | 58.50 | 9.27 |
| iv | சீ10ஏ - திஹாகட-கம்புருப்பிட்டிய- மாவரல – ஹொட்டபொல வீதி | 13.95 | 6.34 | 7.61 |
| v | சீ10பீ- ஹுங்கம- மித்தெனிய வீதி | 24.53 | 12.54 | 11.99 |

## 3.5 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கடன் வசதி உடன்படிக்கையின் படி நிதியளிப்பதற்காக உடன்பட்டதொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | % |
| சீனா | 500 | 50,000 | 15,955 | 15,955 | 19,230 | 38.46 |
| இலங்கை அரசாங்கம் | 56 | 5,600 | 1,918 | 1,918 | 2,481 | 44.30 |
| | 556 | 55,600 | 17,873 | 17,873 | 21,711 | 39.05 |

* அட்டுறு செலவினம், பிடிகாசு மற்றும் கோரப்பட வேண்டியுள்ள உள்ளக நடைமுறை கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் என்பன உள்ளடக்கப்படாமை காரணமாக இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்த இந்தத் தொகை வித்தியாசப்படுகிறது.

## 3.6. பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டம் தொடர்பான 19 ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு உள்ளன.

| இல | ஒப்பந்த இல. | வீதி/ பாலம்/ செயற்திட்ட நடவடிக்கையின் பெயர் | இலக்கிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | இலக்கு % | உள்ளபடியானது % |
| 1 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ சீ2ஏ | கண்டி- மஹீயங்கயை- பதியத்தலாவ வீதி (93.15-102.28 கிமீ) | 2012.12.06 | 100 | 100 |
| 2 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ சீ2பீ | பதுளை- கரமெட்டிய- அண்டல்பொத்த வீதி (0.0- 48.0 கிமீ) | 2013.12.06 | 46.57 | 46.50 |
| 3 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ5 | மஹியங்களை- திம்புலாகல- டலுக்கன வீதி (0.0- 24.10 கிமீ) | 2013.12.06 | 55.02 | 85 |
| 4 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ5பீ | பிபில- உரனியா- மஹியங்கனை வீதி (22.0- 39.58 கிமீ) | 2014.03.19 | 25.01 | 30.40 |
| 5 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ6 | கல்குளமை- அநுராதபுரம் வீதி (0.15 கிமீ) மற்றும் (16.0-16.64 கிமீ) | 2013.11.06 | 86.95 | 46.07 |
| 6 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ7 | (அ) கடகபொல- ரம்பாவ வீதி (0.0- 18.71 கிமீ) | - | 16.58 | 13.80 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | (ஆ) குருநாகல்- நாரம்மல - மாதம்பே வீதி (0.0-22.36 கிமீ) | 2014.06.17 | 15.02 | 13 |
| | | (இ) ஹலகெதர- ரம்புக்கனை வீதி (0.0- 18.50 கிமீ) | | 9 | 8 |
| 7 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ11 | தேன்னக்கும்பர- திகிலகஸ்கட ராகல வீதி (20.30- 73.64 கிமீ) | 2014.09.19 | 18.3 | 17.3 |
| 8 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ12 | உஸ்வெட்டகெயாய எப்பமுல்வ- பமுனுகம வீதி (0.0- 8.05 கிமீ) | 2013.01.08 | 71.13 | 57.70 |
| 9 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ13 | பாலாவி- கல்பிட்டி வீதி (14.0- 40.60 கிமீ௸ | 2014.05.29 | 14.04 | 16.00 |
| 10 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ15 | மஹியங்கனை- திம்புலாகல தலுக்கனை வீதி (24.10- 72.8 கிமீ) | | 6.38 | 5.43 |
| | | மன்னம்பிட்டிய- அரலகன்வில மதுரு ஓயா வீதி (0.0- 3.0 கிமீ) | 2014.06.05 | 6.38 | 5.43 |
| 11 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ17 | நுவரெலிய மாவட்டத்தில் மாகாண வீதிகள் | 2014.03.19 | 28.37 | 24.6 |
| 12 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ சீ1ஏ | கெரரவெல - பெலவத்தை- பிட்டிகல வீதி (0.0- 17.50 கிமீ) | 2013.06.05 | 38.58 | 26.33 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ4 | திருவானகெட்டிய- அகலவத்தை வீதி (33.45- 67.80 கிமீ) | 2013.12.11 | 55 | 15 |
| | | கோரண- அங்குருவத்தோட்டை அழுத்கம வீதி (5.0- 32.0 கிமீ) | 2013.12.11 | 46.88 | 19.97 |
| | | ஹோரவெட- பெலவத்தை- பிட்டிகல வீதி (17.5- 25.74 கிமீ) | 2013.12.11 | 100 | 27.8 |
| 14 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ9 | ஹம்பாந்தோட்டை நீரெந்துப் பகுதி அபிவிருத்தியில் மாத்தளை விமான நிலைய நுழைவு வீதி சந்தியில் மேம்பால நிர்மாணம் | 2013.12.06 | 62 | 67 |
| | | ஹம்பாந்தோட்டை நீரெந்துப் பகுதி அபிவிருத்தியில் 100 அடி மேம்பாலம் மற்றும் உப வீதி சந்தி நிர்மாணம் | 2013.12.11 | 61 | 50 |
| 15 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ21 | திருவானகெட்டிய- அகலவத்தை வீதியில் பாலங்களின் மீள்நிர்மாணம் /அகலமாக்கல் (33.45- 67.80 கிமீ) | 2013.12.05 | 51.52 | 33.00 |
| 16 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ24 | ஹோரனை- அங்குவத்தோட்டை - அழுத்கம வீதியில் பாலங்களின் மீள்நிர்மாணம் / அகலமாக்கல் (5.0- 32 கிமீ) | 2013.12.05 | 67.77 | 58.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ20 | நாகோடை- கலவெல்லாவ- பெல்லப்பிட்டிய வீதி (27.0- 57.0 கிமீ) | 2014.03.19 | 27.25 | 16.30 |
| 18 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ10பீ | குங்கம- மித்தெனிய வீதி (0.0- 30.0 கிமீ) | 2014.03.19 | 24.53 | 12.54 |
| 19 | ஆர்டிஏ/ஆர்என்ஜபி/பீஆர்பி2/ பொதி சீ/சீ10ஏ | திஹாகொடை- ஹம்புறுப்பிட்டய- மாவரல- கொட்டப்பொல வீதி (23.0-67.0 கிமீ) | 2014.04.06 | 13.95 | 6.34 |